Tamil

# சிறந்த எதிர்காலத்திற்காக SV -க்கு வாக்களியுங்கள்!



# சிறந்த எதிர்காலத்திற்காக SV -க்கு வாக்களியுங்கள்!

நார்வே நாட்டின் மிகப்பெரிய விஷயங்களில் ஒன்று, மக்களிடையே பொருளாதார சமத்துவமின்மை குறைவாக இருப்பதுதான். ஆனால் சமீபத்திய ஆண்டுகளில், ஏதோ மாற்றம் ஏற்பட்டுள்ளது. சமத்துவமின்மை வளர்ந்துள்ளது. இன்றைய காலகட்டத்தைப்போன்று நார்வேயில் இதற்கு முன்பு ஒருபோதும் இவ்வளவு பில்லியனர்கள் இருந்ததில்லை. அதே நேரத்தில், பெரும்பாலான மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் கடினமாகிவிட்டது.

அனைத்திலும் விலைவாசி உயர்ந்துவிட்டது. சாதாரண வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு, வாழ்வது முன்பை விட இப்போது மிகவும் கடினமாக உள்ளது.

சமூக சமத்துவமின்மையைக் குறைக்க நம்மிடம் உள்ள மிகவும் பயனுள்ள கருவி பொதுநல அரசு ஆகும். ஆனால் அது நெருக்கடியில் உள்ளது. நாம் அதைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் - அதைப் பலப்படுத்தி விரிவுபடுத்தவும் வேண்டும். பள்ளிகள், மழலையர் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளில் அனைவருக்கும் உயர்தர சேவைகள் வழங்குவதை SV உறுதி செய்யும், மேலும் வேலையைச் செய்து முடிக்கத் தேவையான ஊழியர்களையும் கொண்டிருக்கும். குழந்தைகளுக்கான சலுகைகளை அதிகரிக்கவும், ஒவ்வொரு குழந்தையும் மழலையர் பள்ளிக்குச் செல்ல முடியும் என்பதை உறுதிப்படுத்தவும், அனைவருக்கும் இலவச பல் பராமரிப்புக் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் நாங்கள் விரும்புகிறோம்.

நார்வேயின் இயற்கை சூழல் பரந்த அளவில் பாதிக்கப்பட்டு வருகிறது. அதே நேரத்தில், நாம் உலகளாவிய காலநிலை நெருக்கடியையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நார்வே முன்னிலை வகித்து தன் பங்கை முறையாக மேற்கொள்ள வேண்டும். புதிய எண்ணெய் வயல்களைத் திறப்பதை நிறுத்திவிட்டு, வேலைகள், பல்லுயிர் பெருக்கம் மற்றும் மக்கள் இயற்கையைப் பேணி பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை இப்போதே எடுக்க வேண்டும்.

போராலும் அநீதியாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு SV துணையாக இருக்கும். சர்வதேச உதவியை அதிகரிக்க மற்றும் முரண்பாடுகளிலிருந்து விலகி வரும் மக்களுக்கு ஆதரவளிக்க நாங்கள் பாடுபடுகிறோம், மேலும் நாமறிந்த அமெரிக்காவில் டொனால்ட் டிரம்பால் விளைந்தது போன்ற ஜனநாயகத்தின் மீதான அனைத்து தாக்குதல்களையும் நாங்கள் கண்டிக்கிறோம். பாலஸ்தீன நாட்டின் சுதந்திரத்திற்கான போராட்டத்தை நாங்கள் ஒருபோதும் கைவிட மாட்டோம், மேலும் உக்ரேனியர்களின் சுதந்திரப் போராட்டத்தில் அவர்களுக்கு ஆதரவளிப்போம்.

நீங்கள் ஆதரிக்கிறீர்களா? செப்டம்பர் 8 ஆம் தேதி SV -க்கு வாக்களியுங்கள்!

**Sosialistisk Venstreparti**
Møllergata 4, 0179 Oslo
21 93 33 00
post@sv.no
sv.no

**Bli medlem i SV her:**